**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.24/2022**

வாதி சாட்சி 2 ரவிசங்கர் த/பெ.தேவராஜ்

28.03.2025 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திருமதி.பிரமிளா தேவி, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வாதி சாட்சி 2 ரவிசங்கர் அனுமதியின் பேரில் 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வாதி இந்த வழக்கை பிரதிவாதிகள் மீது எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் பிரதிவாதிகள் பணம் கொடுக்கவேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதிகள் கடன் வாங்கினார்களா என்றால் கோபு என்பவர் கடன் வாங்கினார். கோபுவும் வாதியும் சொந்தகாரர்களா என்றால் இல்லை. கோபுவும் பிரதிவாகளும் சொந்தகாரர்களா என்றால் பிரதிவாதிகள் கோபுவின் வாரிசுகள். வாதியும் நானும் உறவினரா என்றால் நான் வாதியின் குடும்ப நண்பர். என் பூர்வீக ஊர் எது என்றால் ரெட்டிகுப்பம். கோபு எந்த ஊர் என்றால் விக்கிரவாண்டி. ஹேமலதா(வாதி) எந்த ஊர் என்றால் என் ஊர் தான். கோபு எவ்வளவு ரூபாய் கடன் வாங்கினார் என்றால் 3 தவணைகளாக மொத்தம் ரூபாய் 30 லட்சம் கடன் வாங்கினார். 3 தவணைகள் தேதி தெரியுமா என்றால் முதல் தவணை தேதி 05.01.2019, 2வது தவணை தேதி 10.01.2019, 3வது தவணை 25.01.2019 ஆகும். 3 பாண்டுகளும் எனக்கு தெரிந்து வாங்கப்பட்டதா என்றால் ஆமாம். நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் 3 பாண்டுகளிலும் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன். 3 பாண்டுகளையும் எழுதியவர் யார் என்றால் பிரிண்ட் செய்யப்பட்ட படிவத்தில் விவரங்களை கோபு பூர்த்தி செய்து எழுதினார்.

முதல் பாண்டு எழுதும் போது எத்தனை மணிக்கு கோபு கடன் வாங்கினார் என்றால் காலை 10.00 மணிக்கு கடன் வாங்கினார். எந்த இடத்தில்

கடன் வாங்கினார் என்றால் ரெட்டிகுப்பத்தில் உள்ள வாதியின் வீட்டில் வைத்து கடன் வாங்கினார். 2வது பாண்டு எந்த இடத்தில் எத்தனை மணிக்கு எழுதி கடன் வாங்கினார் என்றால் காலை சுமார் 10.30 அல்லது 11.00 மணிக்கு எழுதி வாதியின் வீட்டில் கடன் வாங்கினார். 3வது பாண்டு எந்த இடத்தில் எத்தனை மணிக்கு எழுதி கடன் வாங்கினார் என்றால் காலை சுமார் 10.30 அல்லது 11.00 மணிக்கு எழுதி வாதியின் வீட்டில் கடன் வாங்கினார். சாட்சி கையொப்பம் போட என்னை அழைத்தது யார் என்றால் வாதி ஹேமலதா தான் அழைத்தார். எத்தனை ஆண்டுகளாக வாதி எனக்கு பழக்கம் என்றால் சுமார் 30 ஆண்டுகளாக பழக்கம். வாதி என்ன வேலை செய்கிறார் என்றால் அவர் குடும்பத்தை நிர்வாகம் செய்கிறார். வாதிக்கு வருமானம் உள்ளதா என்றால் அவருடைய தந்தை பணம் கொடுப்பார் மற்றும் வாதிக்கு நகைகள் உள்ளது. வாதியின் தந்தை வாதிக்கு எவ்வளவு பணம் மற்றும் சொத்து கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. முதல் பாண்டில் ரூபாய் 10 லட்சம் ரொக்கமாக கொடுத்தாரா என்றால் ஆமாம். அது 1000 ரூபாய் நோட்டுக்களா அல்லது 500 ரூபாய் நோட்டுக்களா என்றால் 500 ரூபாய் நோட்டுக்கள். 500 ரூபாய் நோட்டுக்கள் எத்தனை இருந்தது என்றால் 20 கட்டுக்கள் இருந்தது. ஒரு கட்டில் எத்தனை நோட்டுக்கள் இருந்தது என்றால் 100 நோட்டுக்கள் இருந்தது. 2வது பாண்டில் ரூபாய் 10 லட்சம் ரொக்கமாக கொடுத்தாரா என்றால் 2வது மற்றும் 3வது பாண்டுகளுக்கும் ரொக்கமாக தான் பணம் கொடுத்தார். வாதி 3 பாண்டுகளுக்கும் தொகையினை கையில் வைத்திருந்து கொடுத்தாரா அல்லது வங்கியில் எடுத்து கொடுத்தாரா என்றால் தொகை வீட்டில் வைத்திருந்தார், அதனை எடுத்து கொடுத்தார். நான் சாட்சி கையொப்பம் போட்டபோது என்னுடன் இருந்தவர்கள் யார் என்றால் வாதி, வாதியின் பெற்றோர், பிரதிவாதி கோபு, மற்றொரு சாட்சி கையெழுத்து போட்டவர் ஆகியோர்கள் இருந்தோம். மற்றொரு சாட்சி கையொப்பம் போட்டவர் யார் எந்த ஊர் என்றால் அவர் பெயர் பிச்சைபிள்ளை அவரும்

ரெட்டிகுப்பம் தான். நானும் பிச்சைபிள்ளையும் உறவினர்களா என்றால் ஆமாம். கோபு தவிற வேறு யாருக்காவது வாதி கடன் கொடுத்திருக்கிறாரா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. கோபுவின் குடும்பம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கோபு எப்போது இறந்தார் என்றால் கடன் வாங்கியபிறகு சுமார் 2 அல்லது 3 மாதங்கள் கழித்து இறந்தார். பிரதிவாதிகளுக்கிடையில் அவர்கள் குடும்ப சொத்து குறித்து பாகப்பிரிவினை வழக்கு இதே நீதிமன்றத்தில் நடைபெறுவது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கோபு எப்படி எனக்கு தெரியும் என்றால் அவர் விக்கிரவாண்டி சொசைட்டி தலைவராக இருந்தார், விக்கிரவாண்டியில் ரைஸ்மில் வைத்திருந்தார், அவருடைய தம்பி நான் படித்த பள்ளியில் எனக்கு சீனியராக இருந்தார், அந்த வகையில் கோபுவை எனக்கு தெரியும். 3 பாண்டுகளையும் நான் படித்துபார்த்து சாட்சி கையொப்பம் போட்டேனா என்றால் ஆமாம். 3 பாண்டுகளிலும் தமிழ் ஆண்டு மற்றும் மாதம் போடப்பட்டிருந்ததா என்றால் இல்லை. முதல் பாண்டு எந்த கலர் மை பேனாவினால் எழுதப்பட்டிருந்தது என்றால் நீல நிற மையினால் எழுதப்பட்டிருந்தது. 2வது பாண்டு எந்த கலர் மை பேனாவினால் எழுதப்பட்டிருந்தது என்றால் நீல நிற மையினால் எழுதப்பட்டிருந்தது. 3வது பாண்டு எந்த கலர் மை பேனாவினால் எழுதப்பட்டிருந்தது என்றால் நீல நிற மையினால் எழுதப்பட்டிருந்தது. நான் எந்த கலர் போனாவில் கையெழுத்து போட்டேன் என்றால் நீல நிற பேனாவில் கையெழுத்து போட்டேன். பிச்சைபிள்ளை எந்த கலர் போனாவில் கையெழுத்து போட்டார் என்றால் நீல நிற பேனாவில் கையெழுத்து போட்டார். 3 பாண்டுகளிலும் ரெவன்யூ ஸ்டாம்பு ஒட்டப்பட்டிருந்ததா என்றால் ஒட்டப்பட்டிருந்தது. எத்தனை ஸ்டாம்புகள் ஒட்டப்பட்டிருந்தது என்றால் 2 ஸ்டாம்புகள் ஒட்டப்பட்டிருந்தது. கோபு பணம் பெற்றுக்கொண்டு என் முன்னிலையில் கையொப்பம் போட்டுக்கொடுத்தாரா என்றால் ஆமாம். 3 பாண்டுகளிலும்



கோபு என் முன்னிலையில் கையொப்பம் போட்டாரா என்றால் ஆமாம். 3

பாண்டுகளையும் என் முன்னால் எழுதினாரா என்றால் கோபு 3 பாண்டுகளையும் எழுதி கொண்டுவந்திருந்தார். ரூ.30 லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு வாதிக்கு வசதியும் வருமானமும் இல்லை என்றால் சரியல்ல. கோபு என்ன காரணத்திற்காக கடன் வாங்கினார் என்றால் அவருடைய ரைஸ்மில்லை மேம்படுத்துவதற்காக கடன் வாங்கினார். 3 கடன்களும் அதே காரணத்திற்காக தான் வாங்கினாரா என்றால் ஆமாம். ரைஸ்மில் மேம்படுத்துவதற்காக கடன் வாங்குவதாக 3 பாண்டுகளிலும் எழுதப்பட்டுள்ளதா என்றால் அப்படி எழுதவில்லை. கோபு வாதியிடம் ரூ.30 லட்சம் கடன் வாங்கியதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நானும் வாதியும் குடும்ப நண்பர்கள் என்பதால் வாதிக்கு ஆதரவாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.